## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 1445/2018/ எம்.சி. 8 )** |
| **நாள்** | - | **12.02.2018 பிற்பகல் 4.00 மணி** |
| **தலைமை** | - | **டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

**பொருள் எண் 1**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுக் கணக்குப் பிரிவு – 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டு கணக்குகள் தனியார் கணக்கு ஆலோசகர் மூலம் கணக்கு தயாரிக்கப்பட்டது – தணிக்கைத் தடை குறைபாடு – மன்றத்தின் ஒப்புதல் கோருவது – தொடர்பாக.

**பார்வை** :
1. ஆணையாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் கடித ந.க.எண். 37801/2012/wb4 நாள். 27.05.2013.
2. தி/ள். எம்.ஆர்.வி. கிருஷ்ணா & கோ நிறுவனத்தால் அளிக்கப்பட்ட பொது அதிகார ஆவணம்
3. நான்காவது மாநில நிதிக்குழு பரிந்துரை
4. தணிக்கைத் தடை சீட்டு எண். 059 / 2016–17

--------

பார்வை 4ல் காண் தணிக்கைத் தடை சீட்டில் 2014–15 மற்றும் 2015–16ம் ஆண்டு கணக்குகள் தனியார் கணக்கு ஆலோசகர் மூலம் தயாரித்து வழங்கியமைக்கு ரூ.13,40,280/– வழங்கப்பட்ட செலவினம் முழுமையும் தணிக்கைத் தடைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

பார்வை 1ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் 2011–12ம் ஆண்டு கணக்குகளை தி/ள். எம்.ஆர்.வி. கிருஷ்ணா & கோ என்ற நிறுவனத்தின் மூலமாக துல்லியமாக முடிக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் பொது அதிகார ஆவணத்தில் தி/ள். எம்.ஆர்.வி. கிருஷ்ணா & கோ நிறுவனத்தால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனமான தி/ள் G.R. அசோசியேட்ஸ் நிறுவன உரிமையாளர் திருமதி R.கீதா அவர்களுக்கு ஆண்டு கணக்குகளை முடிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் கண்டுள்ள நான்காவது மாநில நிதிக்குழு பரிந்துரையில் வரிசை எண் 78 அத்தியாயம் VII பத்தி 27(Vi)-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஆண்டுக் கணக்குகளை தனியார் கணக்கு ஆலோசகர் மூலம் தயார் செய்து முடிக்கப்படுவதை போல ஏனைய உள்ளாட்சி அமைப்புகளும் அவ்வாறே கணக்குகளை முடிக்க பரிந்துரை செய்யப்பபட்டுள்ளது. மேற்படி பரிந்துரையை தமிழ்நாடு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை 1ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் மற்றும் பார்வை 3ல் காணும் நான்காவது மாநில நிதிக்குழு பரிந்துரையில் தெரிவித்துள்ளவாறு தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று வருவாய் நிதி, மூலதன நிதி, ஆரம்ப கல்வி நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்கள், பிரதான அலுவலகம் ஆகியவற்றின் ஆண்டுக் கணக்குகள் தயார் செய்து ஒருங்கிணைப்பு செய்து முறையான கணக்குகள் Municipal Accounting Manual படி தயாரிக்கப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

எனவே, ஆணையாளர் அவர்களின் அனுமதியுடன் 2014–15 மற்றும் 2015–16 ஆகிய ஆண்டு கணக்குகள் முடிக்கப்பட்டதற்காக வழங்கப்பட்ட அனுமதி மற்றும் பட்டியல் தொகை ரூ.13,40,280/–க்கு பின்னேற்பு வேண்டியும், 2016–17, 2017–18ம் ஆண்டுகளில் தொடர்ந்து ஆண்டு கணக்குகள் முடிக்க G.R. அசோசியேட்ஸ் கோவை நிறுவனத்திற்கு ஆணையாளர் அவர்கள் அனுமதி அளித்ததற்கும், அதற்காகும் செலவினங்களுக்கும் பின்னேற்பு அனுமதியும், இதே அடிப்படையில் இனிவரும் காலங்களில் இந்த நடைமுறை பின்பற்றி கணக்கு தயாரிக்க அனுமதி வழங்கவும், அதற்காகும் செலவினங்களை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண். 10685/2017/பி2

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் டாடாபாத் பிரிவு வார்டு எண் 50ல் டாடாபாத் வீதி எண் 3 லுள்ள மாநகராட்சி அலுவலர் குடியிருப்பிற்கு மராமத்து செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3,30,000-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 403/2018/ எம்.டி. 5

---

## பொருள் எண் 3

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுக் கணக்குப் பிரிவு –பொருள்கள் மற்றும் சேவை வரி (GST) – **01.07.2017** முதல் அமல்படுத்துதல் – பட்டயக் கணக்கர்/ ஆலோசகர் மாதாந்திரக் கட்டணத்தில் நியமனம் செய்தல் **–** தொடர்பாக.

பா**ர்வை** : **1.** தி/ள் G.R. Systech, அவர்களின் கடிதம் நாள் **12.10.2017**

**2.** ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள் **29.12.2017**

--------

மத்திய அரசால் **01.07.2017** முதல் அமல்படுத்தப்பட்ட பொருள்கள் மற்றும் சேவை வரி (GST) தொடர்பாக, கோயம்புத்தூர் மாநகராட்சியில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளின் தன்மை, அதற்கான GST வரி விதிப்பு, வரி விகிதம், மதிப்பீடு மற்றும் Input tax credit கணக்கில் எடுத்தல் ஆகியவற்றை நிர்ணயம் செய்தல்.

2. GST தொடர்பான பிற விநியோகங்களுக்கு ஆவணங்கள் தயாரித்தல்.

3. GST தொடர்பான காலமுறை அறிக்கையினை தயார் செய்தல் மற்றும் தயார் செய்யப்படும் அறிக்கையினை வணிக வரித் துறையில் தாக்கல் செய்தல்.

4. ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்.

5. பொருட்கள் மற்றும் சேவைகளின் அனைத்து பரிமாற்றங்களை மாதம்தோறும் சரிபார்த்தல் மேலும் அவ்வப்போது மாநகராட்சிக்கு ஏற்படும் நடைமுறை சிக்கல்கள்/ சிரமங்களுக்கு தீர்வு காணுதல்.

6. மாநகராட்சி பணி தொடர்பான மதிப்பீடு / வகைப்படுத்துதல் / உரிமம் / தகுதி மற்றும் பிற சிக்கல்களுக்கு தீர்வு காணுதல்.

7. GST தொடர்பான அறிவிப்புகள், தகவல்கள் மற்றும் வணிக வரித் துறையிலிருந்து அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கையின்படி வரி விகிதங்களை திருத்தியமைத்தல்.

8. GST தொடர்பாக வணிக வரித்துறையிலிருந்து பெறப்படும் கடிதங்களுக்கு பதில் அளித்தல்.

9. GST தொடர்பான உள்ளாட்சி நிதி தணிக்கை தடைகளுக்கு பதில் அளித்தல்,

10. மத்திய மற்றும் மாநில அதிகாரிகள் தணிக்கை செய்யும் போது உதவி புரிதல் மற்றும் தணிக்கை தடை நிவர்த்தி செய்ய பதில்கள் தயாரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

மாநகராட்சிக்கு GST தொடர்பான பணிகளை மேற்கொள்ள மாதாந்திர கட்டணம் ரூ **25000/–** (அனைத்து வரிகளும் உட்பட) அடிப்படையில் தி/ள் . G.R. Systech அவர்களை ஆலோசகராக (Consultant) நியமனம் செய்ய பார்வை **2**ல் காணும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனவே தி/ள் G.R. Systech அவர்களை மாதாந்திர கட்டணம் ரூ **25000/–** (அனைத்து வரிகளும் உட்பட) அடிப்படையில் ஆலோசகராக (Consultant) நியமனம் செய்து GST தொடர்பான பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். **4990/2017/**பி**13**

---

## பொருள் எண் 4

**பொருள்** : குத்தகை – கோயம்புத்தூர்மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - 2017-2020-ம் மூன்றாண்டுகளுக்கு வருடாந்திர குத்தகை இனங்கள் ஒப்படைக்கப்பட்டது – 31.03.2018 உடன் ஓராண்டிற்கு உரிமக்காலம் முடிவடைவதால் குத்தகை இனங்களை 2018-19–ம் இரண்டாம் ஆண்டிற்கு ஒப்படைப்பதற்கும் 2015-18 மூன்றாண்டு உரிமக்காலம் முடிவடைந்த குத்தகை இனங்களை 2018-2021–ம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பதற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

**பார்வை** : 1.அரசாணை(நிலை) எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந-2).துறை, நாள்:25.05.2009.
2. மாமன்ற தீர்மான எண் 395, நாள் :07.02.2014.
3. மாமன்ற தீர்மான எண் 111, நாள் :12. 05.2017.
4. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.24.01.2018.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்கள் பார்வை (2) மற்றும் (3)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் அனுமதி பெற்று 2017-2020-ம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்கப்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களின் ஓராண்டு உரிமக்காலம் 31.03.2018 உடன் முடிவடைவதால் 01.04.2018முதல் 31.03.2019 வரை இரண்டாம் ஆண்டிற்கு 2017-2018 –ம் ஆண்டின் உரிமத்தொகையில் 5% உயர்வு செய்து பார்வை (1)-ல் காணும் அரசாணையின்படி உரிமத்தொகை நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

**அட்டவணை :1**

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் திருவாளர்கள் | 2017-18 –ம் ஆண்டு உரிமத் தொகை ரூபாயில் | 5% உயர்வு செய்யப் பட வேண்டிய தொகை ரூபாயில் | 2018-19-ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய தொகை ரூபாயில் | ஒப்ப டைக் கும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** |
| 1. | இராமநாதபுரம் மாநகராட்சி கட்டணக் கழிப்பிடம் | எம். முத்து கிருஷ்ணன் | 3,02,000/- | 15100/- | 3,17,100/- | 2-ம் ஆண்டு |
| 2. | சிங்காநல்லூர் வாரச்சந்தை | எ. சந்திரன் | 5,00,891/- | 25045/- | 5,25,936/- | 2-ம் ஆண்டு |
| 3. | பேருந்து நிலையத்திற்குள் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | சி. செல்வம் | 12,15,000/- | 60750/- | 12,75,750/- | 2-ம் ஆண்டு |

மேற்காணும் குத்தகை இனங்களுக்கு கலம் எண் 6-ல் கண்டுள்ளவாறு குத்தகைத் தொகை நிர்ணயம் செய்த 2-ம் ஆண்டிற்கு உரிம நீட்டிப்பு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் அட்டவணை (2) - ல் குறிப்பிட்டுள்ள கீழ்க்காணும் குத்தகை இனங்களின் உரிமக் காலம் 31.03.2018 உடன் மூன்றாண்டு முடிவுற்ற நிலையில் 2018-2021 வரை மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பதற்கும், பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அட்டவணை : 2**

| வ. எண் | வார்டு எண் | குத்தகை இனம் | உரிமக்காலம் முடிவடையும் தேதி |
|---|---|---|---|
| 1. | 63 | சிங்காநல்லூர் ஆடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட அனைத்துப் பகுதிகள்) | 31.03.2018 |
| 2. | 64 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைபேசி பூத் வைத்துக் கொள்ளும் உரிமம் | 31.03.2018 |
| 3. | 64 | பேருந்து நிலையத்திலுள்ள பொருள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏல நடவடிக்கையில் உள்ளது. |
| 4. | 69 | புலியகுளம் மாநகராட்சிக் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏல நடவடிக்கையில் உள்ளது. |

மேற்காணும் ஏல இனங்களில் வரிசை எண் 3 மற்றும் 4-ல் கண்டுள்ள இனங்கள் கடந்த ஓர் ஆண்டு காலமாக ஏல நடவடிக்கையில் உள்ளது. இவ்வினங்களுக்கு ஏலத்தில் கலந்து கொள்ள எவரும் முன்வரவில்லை.

**அ.** அட்டவணை 1-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகைகளை குத்தகைதாரருக்கு தெரிவிக்கவும், குத்தகைதாரர்கள் உரிமத்தொகை செலுத்த தவறும்பட்சத்தில் குத்தகை இனங்களை மீண்டும் மறு ஏலம் விடவும், மேற்படி குத்தகைதாரர்கள் பெயரை கருப்புப் பட்டியலில் சேர்த்து வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்ய அனுமதியும்,

**ஆ**. அட்டவணை 2-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களை 2018-2021- ம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி பட்டியலில் சேர்த்து ஏலம் விடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண் : 668/2017/அ11 (கி)

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து செய்தல் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் உத்தரவிட்டதற்கிணங்க கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு **:**

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 5, 6, & 7 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண். 1497/2018/எம்.டி.2) | 3.00 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 10, 12 & 14 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண்.1498/2018/எம்.டி.2) | 7.00 |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 15 & 16 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண். 1499 /2018/எம்.டி.2) | 5.00 |

| | | |
|---|---|---|
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 17, 18 & 19 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண்.1500/2018/எம்.டி.2) | 7.00 |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்20 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண்.1501/2018/எம்.டி.2) | 5.00 |
| 6 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 21 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண்.1502/2018/எம்.டி.2) | 10.00 |
| 7 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 22 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண்.1503/2018/எம்.டி.2) | 5.00 |
| 8 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 24 க்குட்பட்ட பகுதியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண்.1504/2018/எம்.டி.2) | 5.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1497/2018/எம்.டி2

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அம்ரூத் (AMRUT) திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு சொந்தமான பகுதிகளில் பூங்காக்கள் அமைத்தல் (பகுதி–III) பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து வழங்கியுள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10298/17/ JN 5 | வார்டு எண். 34 திருமுருகன் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 65,04,100/– | 28.12.2017 | 1. திரு. கே. ராமசாமி, கோயம்புத்தூர் 4.10% அதிகம்.<br><br>2. திரு. யு. மணி, கோயம்புத்தூர். | திரு. கே. ராமசாமி, கோயம்புத்தூர் 4.08% அதிகம்.<br>(விலை குறைப்பிற்குப் பின் ரூ.6477125/–) |
| 2 | 10299/17/ JN 5 | வார்டு எண். 37 எஸ்.ஆர். கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 64,79,100/– | 28.12.2017 | 1) தி/ள். ஸ்ரீ மேகவர்ணா கன்ஸ்ட்ரக்ஷன், கோயம்புத்தூர் 6.97% அதிகம்.<br><br>2) தி/ள். கே.எஸ்.ஆர். & கோ, கோயம்புத்தூர் | தி/ள். ஸ்ரீ மேகவர்ணா கன்ஸ்ட்ரக்ஷன், கோயம்புத்தூர் 4.94% அதிகம்.<br>(விலை குறைப்பிற்குப் பின் ரூ.6465403.80) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 10300/17/ JN 5 | வார்டு எண். 2 வி.கே.எல். நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 52,87,100/– | 28.12.2017 | 1. தி/ள். சி.ஆர். கன்ஸ்ட்ரச்ஷன், கோயம்புத்தூர் 4.44% அதிகம்.<br><br>2) தி/ள். வர்தான் இன்ப்ராஸ்ரக்சர், கோயம்புத்தூர். 9.91% அதிகம். | தி/ள். சி.ஆர். கன்ஸ்ட்ரச்ஷன், கோயம்புத்தூர். 4.38% அதிகம். (விலை குறைப்பிற்குப் பின் ரூ.5248870/–) |
| 4 | 10301/17/ JN 5 | வார்டு எண். 42 ஸ்ரீநிவாசா நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 73,16,100/– | 28.12.2017 | 1. தி/ள். என்கான் இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர். 4.46% அதிகம்.<br><br>2. தி/ள். சி.ஆர். கன்ஸ்ட்ரச்ஷன், கோயம்புத்தூர் 8.51% அதிகம். | தி/ள். என்கான் இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர். 4.40% அதிகம். (விலை குறைப்பிற்குப் பின் ரூ.7246836/–) |
| 5 | 10302/17/ JN 5 | வார்டு எண். 92 பாலு கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 54,41,100/– | 28.12.2017 | 1. தி/ள். வர்தான் இன்ப்ராஸ்ரக்சர், கோயம்புத்தூர். 4.49% அதிகம்.<br><br>2. தி/ள். சி.ஆர். கன்ஸ்ட்ரச்ஷன், கோயம்புத்தூர் 7.95% அதிகம். | தி/ள். வர்தான் இன்ப்ராஸ்ரக்சர், கோயம்புத்தூர். 4.48% அதிகம். (விலை குறைப்பிற்குப் பின் ரூ.5467191 /–) |
| 6 | 10303/17/ JN 5 | வார்டு எண். 76 டெக்ஸ்டூல் காலனி பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 53,24,100/– | 28.12.2017 | 1. திரு. ஆர். ராஜன். கோயம்புத்தூர். 4.46% அதிகம்.<br><br>2. தி/ள். செந்தில் அன் கோ, கோயம்புத்தூர். 5.86% அதிகம். | திரு. ஆர். ராஜன். கோயம்புத்தூர். 4.45% அதிகம்.<br><br>(விலை குறைப்பிற்குப் பின் ரூ.5280490 /–) |
| 7 | 10304/17/ JN 5 | வார்டு எண். 16 சூப்பர் கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 79,41,100/– | 28.12.2017 | 1. தி/ள். சி.ஆர். கன்ஸ்ட்ரச்ஷன், கோயம்புத்தூர் 4.41% அதிகம்<br><br>2. தி/ள். வர்தான் இன்ப்ராஸ்ரக்சர், கோயம்புத்தூர் 8.99% அதிகம். | தி/ள். சி.ஆர். கன்ஸ்ட்ரச்ஷன், கோயம்புத்தூர் 4.35% அதிகம் (விலை குறைப்பிற்குப் பின் ரூ.7839170/–) |
| 8 | 10305/17/ JN 5 | வார்டு எண். 16 நியூ கோல்டன் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 62,41,100/– | 28.12.2017 | 1) தி/ள். வர்தான் இன்ப்ராஸ்ரக்சர், கோயம்புத்தூர். 5.36% அதிகம்.<br><br>2. திரு. யு. மணி, கோயம்புத்தூர். | தி/ள். வர்தான் இன்ப்ராஸ்ரக்சர், கோயம்புத்தூர். 4.98% அதிகம். (விலை குறைப்பிற்குப் பின் ரூ.6311581.89) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்தபுள்ளிகளை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம் ந.க.எண். 10298/ 17 / ஜே.என்5

---

## பொருள் எண் 7

பொருள்: நிலஉரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஆத்துப்பாலம் மற்றும் உக்கடம் சந்திப்பு – ஒப்பணக்கார தெரு வரை கோயம்புத்தூர் கி.மீ.156/2–157/4 தே.நெ.209 (திண்டுக்கல் – பெங்களூரு சாலை) நெடுஞ்சாலைத் துறை மூலம் மேம்பாலம் கட்டுதல் – மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.C, பிளாக் 25, நகர புல எண். TS.No.1905/6, 1905/9, 1905/11, 1905/12, 1905/13, 1905/14, 1905/15 மற்றும் 1905/16ல் உள்ள சுமார் 22870.00 ச.மீ நிலத்தில் மேம்பாலப் பணிகள் மேற்கொள்ள இடங்களுக்கு நுழைவதற்கான முன் அனுமதி வழங்கவும் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க கோரியது – தொடர்பாக.

பார்வை:

1. கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அவர்களின் கடித எண். /2017/உ, நாள்.09.08.2017 மற்றும் கடித எண்.02/2015/உ, நாள்.13.11.2017.

2. கண்காணிப்பு பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அவர்களின் கடிதம் க.எண்.1936/2016/ஆ2, நாள்.26.12.2017 மற்றும் 01.02.2018.

*******

பார்வையில் காண் கடிதங்களில், அரசாணை எண்.103, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.2) துறை, நாள்.26.08.2015ன் படி, தே.நெ.209 (திண்டுக்கல்–பெங்களூரு சாலை) கி.மீ.156/2–157/4 கோயம்புத்தூர் உக்கடம்–ஆத்துப்பாலம் ஒப்பணக்காரத் தெரு வரை கட்டப்பட உள்ள மேம்பாலத்திற்கு நில எடுப்பு மற்றும் மின்கம்பங்களை மாற்றியமைத்தல் பணிக்காக ரூ.88.61 கோடி அங்கீகராம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, இப்பாலத்திற்காக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.C, பிளாக் 25, நகர புல எண். TS.No.1905/6, 1905/9, 1905/11, 1905/12, 1905/13, 1905/14, 1905/15 மற்றும் 1905/16ல் உள்ள சுமார் 22870.00 ச.மீ நிலம் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காண் 01.02.2018ம் தேதிய கடிதத்தில், இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடந்த கூட்டத்தில் அங்கு வசிக்கும் சுமார் 300க்கும் மேற்பட்ட மாநகராட்சி ஊழியர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் மாற்று குடியிருப்பு வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து மேற்படி இடத்தில் உள்ள பயனாளிகள் தொடர்பாக மாநகராட்சி, குடிசைமாற்று வாரியம் மற்றும் நெடுஞ்சாலைத் அலுவலர்களுடன் 25.01.2018ல் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் அங்கு வசிக்கும் சிலர் ஒத்துழைப்பு தர மறுத்து தங்கள் பிரதிநிதிகளை அழைத்து உரிய பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே பணிகள் தொடர வேண்டும் என தெரிவித்துள்ளதாகவும், எனவே நிலம் நெடுஞ்சாலைத்துறைக்கு விரைவாக தேவைப்படுவதால் அதற்கான கலந்தாய்வு கூட்டம் நடத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாற்று ஏற்பாடு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், நெடுஞ்சாலைத் துறை கோரிய நிலபரப்பில் மாநகராட்சி வணிக வளாகக் கடைகள் ஏலமுறையில் விடப்பட்டு இயங்கி வருகிறது. டோபிகானா சலவையாளர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டு வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. புதிய மீன்மார்கெட் வளாகத்தின் முன்புறம் அமைந்துள்ள இடம் வாகனம் நிறுத்தமிடமாக இயங்கி வருகிறது. மேலும், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் பெரிய குளம் நுழைவாயில் பகுதியாக இருப்பதால் அபிவிருத்தி திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி நகரின் மையப்பகுதியில் அத்தியாவசிய மேம்பாலம் தேவை அடிப்படையில், பார்வையில் காண் கடிதங்களில் கேட்டுக்கொண்டதன்படி, தே.நெ.209 (திண்டுக்கல் – பெங்களூரு சாலை) கி.மீ.156/2–157/4 கோயம்புத்தூர் உக்கடம்–ஆத்துப்பாலம் ஒப்பணக்காரத் தெரு வரை மேம்பாலம் கட்டும் பணிக்காக மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.C, பிளாக் 25, நகர புல எண். TS.No.1905/6, 1905/9, 1905/11, 1905/12, 1905/13, 1905/14, 1905/15 மற்றும் 1905/16ல் உள்ள சுமார் 22870.00 ச.மீ நிலத்தினை மாவட்ட நிர்வாகம் நிர்ணயம் செய்யும் நிலமதிப்பின் அடிப்படையில் நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கவும், மேம்பால பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்கவும் கோரி அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 7876/2017/எம்.எச்.5

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம் வாா்டு எண் 2-க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | கோப்பு எண் | பணியின் பெயா் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1688/2018/MD2 | வாா்டு எண் 2- துடியலூா் பேருந்து நிலையம்- மணிஸ் நகா் முதல் மேட்டுப்பாளையம் சாலை வரை தாா் சாலை புதுப்பித்தல் | 28.00 |
| 2 | 1689/2018/MD2 | வாா்டு எண் 2-ல் உள்ள வெள்ளகிணறு சாலையில் சென்டா் மீடியன் மின் விளக்குகளை சரிபாா்த்தல் | 2.00 |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிகளுக்கு நிா்வாக அனுமதி வேண்டி மன்றத்தாள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 1688/2018/ MD2

---

## பொருள் எண் 9

பொருள்: வாா்டு எல்லை மறுவரையறை **2017** – கோயம்புத்தூா் மாநகராட்சி – இறுதி வரைவு வாா்டு எல்லைமறுவரையறை கருத்துரு (படிவங்கள் மற்றும் வரைபடங்கள்) தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்புதல் – மாமன்றத்தின் அனுமதி கோருதல் – தொடா்பாக.

பாா்வை: **1.**உறுப்பினா் செயலா், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், சென்னை அவா்களின் கடிதம் ந.க.எண்.**3174/ 2017**/EG 1, நாள்.**19.10.2017.**
**2.**உறுப்பினா் செயலா், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், சென்னை அவா்களின் கடிதம் ந.க.எண்.**3174/ 2017**/EG 1, நாள்.**13.12.2017.**
**3.** உறுப்பினா் செயலா், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், சென்னை அவா்களின் கடிதம் ந.க.எண்.**3174/ 2017**/EG1-1, நாள்.**31.01.2018.**

*******

பாா்வையில் காண் கடிதங்களின் அடிப்படையிலும், **01.02.2018** அன்று மாவட்ட ஆட்சியா் அலுவலகத்தில் தமிழ்நாடு மறுவரை ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் அனைத்து கட்சியினருடன் நடைபெற்ற கோயம்புத்தூா் மண்டல கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி கீழ்கண்டவாறு கோயம்புத்தூா் மாநகராட்சி ஐந்து மண்டல அலுவலகங்களில் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| **05.02.2018** (முற்பகல்) | : | கிழக்கு மண்டலம். |
| **06.02.2018** (முற்பகல்) | : | வடக்கு மண்டலம் |
| **06.02.2018** (பிற்பகல்) | : | மேற்கு மண்டலம் |
| **07.02.2018** (முற்பகல்) | : | மத்திய மண்டலம் |
| **07.02.2018** (பிற்பகல்) | : | தெற்கு மண்டலம் |

கோயம்புத்தூா் மாநகராட்சி மண்டல அலுவலகங்களில் வாா்டு எல்லை மறுவரையறை கூட்டங்களில் வாா்டு வரையறை தொடா்பான அரசியல் கட்சியினா் மற்றும் பொது மக்களின் ஆட்சேபணைகள், கருத்துகள் பெறப்பட்டு அவை தீா்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட மண்டல உதவி ஆணையா்களால் விபரம் சமா்பிக்கப்பட்டுள்ளது .

மேற்படி கோயம்புத்தூா் மாநகராட்சி ஐந்து மண்டல அலுவலகங்கள் மூலம் ஆட்சேபணைகள், கருத்துகள் பரிசீலித்து தீா்வு செய்யப்பட்ட வாா்டு வரையறை விபரங்கள் ஒருங்கிணைத்து இறுதி செய்யப்பட்ட வாா்டு வரையறை விபரம் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதிக்கு சமா்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதி அளிக்கலாம். ந.க.எண்.**9486/2017/எம்.எச்.5.**

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 11க்குட்பட்ட பகுதிகளுக்குட்பட்ட பல்வேறு சாலைகளில் தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதியதாக மின் கம்பங்களுடன் கூடிய LED தெரு விளக்குகள் அமைத்துத்தர வேண்டுமென கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் மதிப்பீடு தயார் செய்ய உத்தரவிட்டதற்கிணங்க மேற்கூறிய பணிக்கு ரூ.68,25,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 11க்குட்பட்ட பகுதிகளுக்குட்பட்ட பல்வேறு சாலைகளில் தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதியதாக மின் கம்பங்களுடன் கூடிய LED தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.68,25,000/– க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1762/2018/எம்.டி2

---

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 24 க்குட்பட்ட சாஸ்திரி மைதான வளாகத்தில் LED தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.25,00,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1693 /2018/எம்.டி2

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 10 க்குட்பட்ட பகுதிகளுக்குட்பட்ட பல்வேறு சாலைகளில் தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதியதாக மின் கம்பங்களுடன் கூடிய LED தெரு விளக்குகள் அமைத்துத்தர வேண்டுமென கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் மதிப்பீடு தயார் செய்ய உத்தரவிட்டதற்கிணங்க மேற்கூறிய பணிக்கு ரூ.67,50,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 10 க்குட்பட்ட பகுதிகளுக்குட்பட்ட பல்வேறு சாலைகளில் தெருவிளக்குகள் இல்லாத இடங்களில் புதியதாக மின் கம்பங்களுடன் கூடிய LED தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.67,50,000/– க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1763/2018/எம்.டி2

---

**பொருள் எண் 13**

கோயமுத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 1, 2, 3, 4, 26, 27, 28, 31, 38, 39, 40, 41, 42, 43, 46, 47 மற்றும் 55க்கு உட்பட்ட பகுதியில் பொது கழிப்பிடங்களுக்கு பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 & 2 | வார்டு எண் 1 மற்றும் 2-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1776 /18/எம்டி2 | 5.30 |
| 2 | 3 & 4 | வார்டு எண் 3 மற்றும் 4-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1777 /18/எம்டி2 | 4.60 |

| | | | |
|---|---|---|---|
| 3. | 26,27,28,42 | வார்டு எண் 26,27,28 மற்றும் 42-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1778 /18/எம்டி2 | 6.50 |
| 4. | 31 | வார்டு எண் 31-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1779 /18/எம்டி2 | 3.00 |
| 5. | 38 & 39 | வார்டு எண் 38 மற்றும் 39-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1780 /18/எம்டி2 | 5.90 |
| 6. | 40 | வார்டு எண் 40க்குட்பட்ட ஷோபா நகர், மட்டசாலை மற்றும் ஸ்ரீவள்ளி நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மாரமத்து பணி செய்தல் ந.க.எண் 1781 /18/எம்டி2 | 4.90 |
| 7. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட ராஜரத்தினம் வீதி மற்றும் வாசுகி வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மாரமத்து பணி செய்தல் ந.க.எண்1782 /18/எம்டி2 | 3.00 |
| 8. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட அம்மா உணவகம் அருகில் உள்ள ISP கழிப்பிடத்திற்கு மாரமத்து பணி செய்தல் ந.க.எண் 1783 /18/எம்டி2 | 5.00 |
| 9. | 41 | வார்டு எண் 41க்குட்பட்ட ராஜரத்தினம் வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண் 36 /18/எம்டி2 | 1.80 |
| 10 | 43 | வார்டு எண் 43 க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1784 /18/எம்டி2 | 5.00 |
| 11 | 46 | வார்டு எண் 46க்குட்பட்ட அம்பேத்கார் வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண் 35 /18/எம்டி2 | 1.80 |
| 12 | 47 | வார்டு எண் 47க்குட்பட்ட பகவத்சிங்புரம் மற்றும் நேருஜி வீதி பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1785 /18/எம்டி2 | 3.00 |
| 13 | 55 | வார்டு எண் 55 க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல். ந.க.எண் 1786 /18/எம்டி2 | 9.92 |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1776/2018/எம்.டி.2

---

## பொருள் எண் 14

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண்.76, 77, 78, 79, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99 மற்றும் 100க்கு உட்பட்ட பகுதியில் பொது கழிப்பிடங்களுக்கு பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ. எண் | வா. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 76 | வார்டு எண் 76-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண்: 1770 /18/எம்டி4 | 2.35 |
| 2. | 77 | வார்டு எண் 77-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண்: 1771 /18/எம்டி4 | 2.25 |
| 3. | 78 | வார்டு எண் 78-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண்: 1772/18/எம்டி4 | 1.20 |

| | | | |
|---|---|---|---|
| 4. | 79 | வார்டு எண் 79-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண்: 1773/18/எம்டி4 | 3.00 |
| 5. | 86 | வார்டு எண் 86க்கு உட்பட்ட பகுதியில் பில்லால் எஸ்டேட் சமுதாய கழிப்பிடம், ஆசாத் நகர் மற்றும் கல்லமேடு பொது கழிப்பிடங்கள் மராமத்து பணி ந.க.எண்: 1764 /18/எம்டி4 | 4.20 |
| 6. | 87,90,91 | வார்டு எண் 87,90,91-க்கு உட்பட்ட பகுதியிலுள்ள பொது கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண்: 1765 /18/எம்டி4 | 3.20 |
| 7. | 88,89, 92.93 | கோயமுத்துார் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண்:88,89,92 மற்றும் 93-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல். ந.க.எண்: 1766 /18/டி1(தெ) | 4.90 |
| **8.** | **96,98** | வார்டு எண் 96 மற்றும் 98க்குப்பட்ட கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண **1767**/2018/ MD4 | **1.00** |
| **9.** | **100** | வார்டு எண் 100 க்குப்பட்ட கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண **1768** /2018/ MD4 | **0.50** |
| **10.** | **85,94,9 5,97,99** | வார்டு எண் 85,94,95,97,99 க்குட்ப்பட்ட பகுதியில் கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்தல் ந.க.எண **1769** /2018/ MD4 | **5.75** |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 1770 /2018/எம்டி4

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் **–** வார்டு எண் **3** க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது**.**

| வ. எண் | ந.க.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **1.** | **1690/2018/எம்.டி.2** | வார்டு எண் **3** ல் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை ஆழப்படுத்துதல் பணிக்கு | 13.50 |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தாள் சமர்ப்பிக்கப்படுகிறது**.**

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் **1690/2018/எம்.டி.2**

---

## பொருள் எண் 16

**கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாயா கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | வார்டு எண் | ந.க.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 25 | 868/2018/D1C | **வார்டு எண்– 25 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது.** | 1.00 |
| 2. | 45 | 967/2018/D1C | **வார்டு எண்– 45 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது.** | 3.00 |
| 3. | 48 | 972/2018/D1C | **வார்டு எண்- 48 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது.** | 5.00 |
| 4. | 50 | 959/2018/D1C | **வார்டு எண்- 50 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது.** | 5.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | 51 | 958/2018/D1C | வார்டு எண்- 51 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 5.00 |
| 6. | 52 | 970/2018/D1C | வார்டு எண்- 52 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 5.00 |
| 7. | 53 | 969/2018/D1C | வார்டு எண்- 53 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 5.00 |
| 8. | 54 | 971/2018/D1C | வார்டு எண்- 54 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 5.00 |
| 9 | 68&73 | 974/2018/D1C | வார்டு எண்- 68&73 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 3.00 |
| 10 | 70 | 968/2018/D1C | வார்டு எண்- 70 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 5.00 |
| 11 | 71&72 | 973/2018/D1C | வார்டு எண்- 71&72 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 5.00 |
| 12 | 74,80 & 82 | 1003/2018/D1C | வார்டு எண்- 74,80&82 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 2.00 |
| 13 | 81 | 867/2018/D1C | வார்டு எண்- 81 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாயா கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 1.50 |
| 14 | 83 | 866/2018/D1C | வார்டு எண்- 83 குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 1.00 |
| 15 | 84 | 865/2018/D1C | வார்டு எண்- 84குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு மராமத்து மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வது. | 4.50 |
| | | | மொத்தம் | 56.00 |

எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 868/2018/D1C

---

## பொருள் எண் 17

பொருள்: வரியில்லா இனம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.83 டி.கே. மார்க்கெட் கடைஎண். P.211 உரிமதாரர் திரு. D.சிங்கராஜ் பெயரிலிருந்து திரு.T.தங்கராஜ் பெயருக்கு கடை உரிம மாற்றம் செய்வது–தொடர்பாக.

பார்வை:
1. திரு.T.தங்கராஜ், கதவு எண்.18, காந்திநகர், குனியமுத்தூர் அவர்களின் கடிதம் நாள் 22.08.2016.
2. திரு.D.சிங்கராஜ், கடைஎண். P211, டி.கே. மார்க்கெட் கடையின் உரிமதாரர் அவர்களின் கடித நகல்.
3. அரசாணை (நிலை) எண்.92 ந.நி.மற்றும் கு.வ.(நிதி4) துறைநாள் . 03.07.2007.

**************

பார்வை (1)-ல் காணும் கடிதம் மூலம் மனுதாரர், கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.83 டி.கே. மார்க்கெட் வணிக வளாக கடைஎண்.P-211-ல் பங்குதாரராக உள்ளதாக கடையின் உரிமத்தினை தனது பெயருக்கு மாற்றி தருமாறு கோரியுள்ளார்.

பார்வை (2)-ல் காணும் கடிதம் மூலம், கடை உரிமஎண். 8330383-ன் உரிமதாரர் திரு.D.சிங்கராஜ் அவர்களால் நடத்தப்பட்டு வரும் P.211 கடையினை திரு.தங்கராஜ் அவர்களுடன் கூட்டு சேர்ந்து 05.02.2015 அன்று முதல் கூட்டு வியாபார ஒப்பந்த பத்திரம் மூலம் கூட்டு வியாபாரம் செய்து வந்துள்ளனர். தற்போது கூட்டு வியாபாரத்திலிருந்து (விலகல்) ஒப்பந்த பத்திரம் மூலம் திரு.D.சிங்கராஜ் அவர்கள் தனது பெயரிலுள்ள மேற்படி கடைக்குண்டான அனைத்து பாத்தியதைகளை திரு.T.தங்கராஜ் அவர்கள் பெயருக்கு மாற்றம் செய்துதர ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் அவரது மனைவி மற்றும் மகன் இருவரும் மேற்கூறிய பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபணையின்மை கடிதம் வழங்கியுள்ளனர். கூட்டு வியாபார ஒப்பந்த பத்திரம், கூட்டு வியாபாரத்து (விலகல்) பத்திரம் மற்றும் ஆட்சேபணையின்மை கடிதம் ஆகியவற்றின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

பார்வை (3)-ல் காணும் அரசாணையின்படி பக்கம் எண்.4 பத்தி எண்.5ன்படி அனுமதியற்ற அனுபோகதார்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யும் பொழுது 12 மாத வாடகைக்கு சமமான தொகையினை முன்பணமாகவும், 12 மாத வாடகைக்கு சமமான தொகையினை பெயர் மாற்றக் கட்டணமாகவும், பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.500/- பெற்றுக்கொண்டு செலுத்தியும் மற்றும் T.தங்கராஜ் பெயருக்கு கடை உரிம மாற்றம் செய்ய, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்க வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.5081/2016/அ1(ம)

---

## பொருள் எண் 18

ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் 10.01.2018 தேதியின் உத்திரவின்படி தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்க விலைப்புள்ளிகள் உள்ளூர் நிறுவனங்களிடம் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளன.

| வ எண். | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்று, அலகுக்கு தொகை (ரூபாய்.) |
|---|---|---|
| 1 | தி/ள். ஸ்ரீ நாத் இன்ஞ்சினிரிங், கோயம்புத்தூர். | 15,000.00 |
| 2 | தி/ள். சதீஸ் எண்டர்பிரைஸஸ் , கோயம்புத்தூர். | 18,750.00 |
| 3. | தி/ள்.ஜனனி அசோசியேட்ஸ், கோயம்புத்தூர். | 12,000.00 |

இதில் குறைவான விலைப்புள்ளிகள் கொடுத்த தி/ள்.ஜனனி அசோசியேட்ஸ், கோயம்புத்தூர். அவர்கள் குறைந்த விலைப்புள்ளி அலகு ஓன்றுக்கு ரூபாய் 12,000/- விலைப்புள்ளியை ஏற்கவும், இதில் குறைவான விலைப்புள்ளிகள் கொடுத்த தி/ள்.ஜனனி அசோசியேட்ஸ், கோயம்புத்தூர். அவர்கள் குறைந்த விலைப்புள்ளி அலகு ஓன்றுக்கு ரூபாய் 12,000/- விலைப்புள்ளியை ஏற்கவும், 60 கழிப்பிடங்களுக்கு ஆகும் செலவு ரூ.7,20,000/- மற்றும் சேவை வரி ரூ.1,29,600/- ஆக மொத்த தொகை ரூ.8,49,600/-யை அதற்கான செலவின தொகைக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதியும் எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் வழங்கிய முன்அனுமதிக்கு மன்றத்தின் பின்ஏற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 2106 /2018 / MD5

---

## பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் வார்டு எண் – 82 க்குட்பட்ட டவுன்ஹால் மாநகராட்சி ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பிடத்திற்கு கூடுதல் பராமரிப்பு பணிக்கு ரூ.9,98,000/க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இதற்கு நடப்பு நிதியாண்டு 2017-18–ல் நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 2140/2018/எம்.டி.5

---